**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KRISHNAGIRI**

**<u>O.S. No. 11/2023</u>**

**DW.2** is solemnly affirmed on **03.07.2025** in accordance with the provisions of the 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. தீர்த்தகிரி | Father Name | |
| Village | | Taluk | |
| Religion | | Calling | |
| | | Age | |

<u>முதல் விசாரணை :</u>

நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டது தான், அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

ஈஸ்வரி இறந்தது என்னுடைய நிலத்தில் தான் என்றால் சரிதான். 03.10.2022 தேதி இரவு 9.00 மணிக்கு செங்கல்லும், வேஷ்ட் மண்ணும் எடுத்துவந்து விவசாயத்திற்காக சங்கர் என்பவர் டிராக்டரை ஓட்டிக்கொண்டு வந்த போது, கரன்ட் கம்பத்தில் மோதி, கரன்ட் ஒயர் அறுந்து கீழே விழுந்தது என்றால் சரியல்ல. நான் டிராக்டர் ஓட்டுனரிடம் என்னிடம் வீட்டிற்கு UPS Connection உள்ளது, அதனால் கரன்ட் கட்டானாலும் பரவாயில்லை, நீங்கள் தொடர்ந்து ஓட்ட வேண்டாம் என்று சொல்லி நான் நிறுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. சாட்சி தாமே கூறுகிறார் தன்னிடம் UPS இல்லை. மறுநாள் காலை 7.00 மணிக்கு லைன்மேனிடம் அந்த லைனில் செல்லும் கரன்ட்டை நிறுத்த சொன்னேன், லைன்மேனும் அதனை நிறுத்திவிட்டார் என்றால் 6.30 மணிக்கே அவரிடம் சொல்லிவிட்டேன், அவர் ஆப் செய்துவிட்டேன் என்று சொல்லிவிட்டார். ஈஸ்வரி என்பவர் என்னுடைய விவசாய கிணறு உள்ள தொட்டியில் துணி துவைப்பது வழக்கம் என்றால் இல்லை.

ஈஸ்வரியிடம் நான் இன்று நீங்கள் துணி துவைப்பதற்கு செல்ல வேண்டாம் என்று குறிப்பிட்ட போது, ஈஸ்வரி கரன்ட் கம்பி பக்கம் நான் செல்லமாட்டேன், நான் துணி துவைத்துக்கொள்கிறேன் என்று கூறினார், அப்போது அவருடன் அவருடைய மகள் வயிற்று பேரன் கவின் என்பவரையும் அவருடன் நிறுத்தியிருந்தார். அப்போது அங்கிருந்த குழந்தை லைன் கம்பி இருக்கும் இடமாக விளையாட சென்றதால் அவர் பதற்றமடைந்து குழந்தையை தூக்கி பாதுகாப்பாக வைக்க முற்பட்ட போது, அவர் கீழே விழுந்து வலது புறமாக மின் இணைப்பு இருந்த இடத்தில் விழுந்துவிட்டார், அதனால் அவர் ஷாக் அடித்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல, அவர் துணி துவைக்க வந்த விவரமே எனக்கு தெரியாது, நாங்கள் வீட்டிற்கு சாப்பிட சென்றுவிட்டோம். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை ஊத்தங்கரை போலீசார் விசாரித்தாரா என்றால் விசாரித்தார். நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன்.

என் வீட்டின் மின் இணைப்பு எண். 133/008/1601 என்று சொன்னால் சரிதான். என் வீட்டில் யர்த் ஒயர் இழுக்காமல், UPS Connection நேரடி இணைப்பு கொடுத்ததால் தான், அந்த கரன்ட் கம்பி கீழே விழுந்து, அதற்கு யர்த் ஒயர் Connection இல்லாத காரணத்தினால் அந்த கரன்ட் ஆனது Return ஆகி ஈஸ்வரி சம்பவ இடத்தில் இறப்பதற்கு காரணம் ஆகியதால், நான் தான் இந்த விபத்திற்கு முழுமையான பொறுப்பை ஏற்க கடமைப்பட்டவர் என்றால் என் வீட்டில் UPS கிடையாது. நான் தான் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர், 1 முதல் 4 பிரதிவாதிகள் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் என்னால் கொடுக்க முடியாது. இந்த விபத்து முழுக்க முழுக்க என்னுடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

ஈஸ்வரி இறந்தது என்னுடைய நிலத்தில் தான். என் வீட்டிற்கும், கிணற்றிற்கும் போகும் கரன்ட் லைன் தான் அறுந்து விழுந்ததா என்றால் ஆமாம். நான் இறந்தவர் சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மின்வாரிய துறையில் கரன்ட் Reverse ஆகி வந்த காரணத்தினால் தான் ஈஸ்வரிக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று மின்சாரத்துறையினர் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்து, அது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. இறப்பு சம்மந்தமாக போலீசார் என் வீட்டிற்கு வந்து பார்த்த போது, என் வீட்டை சுற்றி பார்த்தார்களா என்றால் வீட்டிற்குள் வரவில்லை, வெளியே இருந்து பார்த்தார்கள். கம்பி அறுந்து கிடந்ததை

பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். அந்த விபத்து நிகழ்ந்தது என்னுடைய கிணறு மற்றும் நிலத்திற்கு அருகில் என்பதால் நானும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் முடியாது. விபத்து நடந்ததற்கு பின்னிட்டு எனக்கு வாதி தரப்பில் வழக்கறிஞர் மூலமாக இழப்பீடு தரக்கோரி அறிவிப்பு வரப்பெற்றதா என்றால் வந்தது. அதற்கு நான் பதில் கொடுத்தேனா என்றால் வழக்கறிஞர் மூலமாக பதில் கொடுத்திருக்கிறேன்.

E.B. லைனை கடைசியாக எப்போது பராமரித்தார்கள் என்றால் சுமார் 65 வருடங்கள் ஆகிறது. சாட்சி தாமே கூறுகிறார் பராமரிப்பே செய்யவில்லை. மின்சாரத்துறையினருக்கு நான் தகவல் தெரிவித்து அவர் சென்று ஆப் செய்தார் என்பது குறித்து எனக்கு நேரிட்டு தகவல் தெரியுமா என்றால் தெரியாது. மின்சார துறையிலிருந்து அறுந்துகிடந்த மின்கம்பியில் மின்னோட்டம் காணப்படுகிறதா என்பது சம்மந்தமாக வந்து மின்சார வாரியத்தார் பார்த்தார்களா என்றால் யாரும் வந்து பார்க்கவில்லை. மின்சார வாரியத்தினரால் சரியாக பராமரிக்காததால் ஈஸ்வரி இறந்துவிட்டார், கவின் என்ற குழந்தைக்கும் பாதிப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். என்னுடைய நிலத்தில் மின்சார வாரியத்தை சேர்ந்தவர்கள் சரிவர மின் இணைப்பு சம்மந்தமாக பராமரிப்பு மேற்கொள்ளாத காரணத்தினாலும், என்னுடைய இடத்தில் தான் இந்த விபத்து ஏற்பட்டு, அதன் காரணமாக ஈஸ்வரிக்கு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்பதால், நானும், மின்சார வாரியத்தினரும் ரூ.30,00,000/- இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் என்னால் இயலாது. யார் அதை கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் மின்சார வாரியம் தான் கொடுக்க வேண்டும்.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.